வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈළනාඩු




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    20.06.2026 சனிக்கிழமை    இதழ் : 165    பக்கங்கள் : 08

# காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் சர்வதேச வழிகாட்டலுடன் செயற்படுகிறது

## யாழ். வந்த ஆணையாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 20

காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் வழிகாட்டல்களுக்கு அமையவே முற்றிலும் சட்டபூர்வமாக இயங்கி வருகிறது என காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக 7.ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் அடிப்படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியை நீதி அமைச்சருடன் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த அலுவலகம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் வழிகாட்டல்களுக்கு

07

# செம்மணிப் புதைகுழி தொடர்பில் நிச்சயம் நீதி நிலை நாட்டப்படும்!

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி



யாழ்ப்பாணம், ஜூன். 20

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிக்கு தேவையான நிதியை எமது அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. அகழ்வின் பின்னரான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கும் நிதிகளை வழங்க தயாராக உள்ளோம். புதைகுழி தொடர்பிலான நீதியான விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் ஆதரவாக இருக்கும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியை நேற்று வெள்ளிக்கிழமை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே

07

## செம்மணி மனித புதைகுழியை நேற்று நேரில் பார்வையிட்டார் நீதி அமைச்சர்!

யாழ்ப்பாணம், ஜூன். 20

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்றும் புதிதாக 7 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டதுடன் 3 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான விசேட குழுவினர் நேற்று அப்பகுதியை நேரில் பார்வையிட்ட நேரத்தில் இந்த அகழ்வுப் பணிகள் நடைபெற்றன.

செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்ட

07



## இரண்டாம் தரப் பிரஜைகளாக தமிழர்களை பார்க்கமாட்டோம்

### கிளிநொச்சியில் கூறினார் நீதி அமைச்சர்

கிளிநொச்சி, ஜூன். 20

தற்போதைய அரசாங்கத்தில், தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாகப் பார்க்கப்பட மாட்டார்கள் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில், கானாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில், முன்னைய அரசியல்வாதிகள் முயற்சி எடுத்திருந்தால், பிரச்னைகளுக்கு தீர்வைப் பெற்றிருக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று

07

## அவதூறுகளை பரப்புவதற்கு அர்ச்சுனாவுக்கு வாய்ப்பூட்டு!

### யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றம் கட்டளை

யாழ்ப்பாணம், ஜூன். 20

பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் மருத்துவர் ஜெயக்குமார் உள்ளிட்டோருக்கு எதிராக தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவு மருத்துவர், நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழங்கப்பட்டது.

07

## நெடுந்தீவில் இருந்து சென்ற மீனவர் நாகபட்டின கரையில் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 20

நெடுந்தீவில் இருந்து மீன்பிடிக்கக் கடலுக்கு சென்றவர் நேற்று நாகபட்டினம் கடற்கரையோரத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 11ஆம் திகதி நெடுந்தீவுப் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்காக சென்றிருந்தவேளை காணாமல் போயுள்ளார்.

இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் விசாரணைகளுடன் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு

07

## செம்மணி சென்ற நீதி அமைச்சரின் கவனத்தை ஈர்க்க நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன். 20

செம்மணி மனிதப் புதைகுழி பகுதியை பார்வையிட வருகை தந்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான விசேட குழுவினர் மற்றும் காணமால் ஆக்கப்பட்டவர்களின்

07

## படையினருக்கு காணிகள் வழங்க எதிர்ப்பு; யாழ். ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 20

அரச படையினருக்கு காணி வழங்க யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற முற்பட்டதால் ஏற்பட்ட பெரும் குழப்பத்தைத் தடுக்க ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை சுமூகமாக்கப்பட்டது.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது யாழ் மாவட்டத்தில் முப்படையினருக்கு அரச காணிகள் வழங்கும் நோக்குடன் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டு தீர்மானம் ஒன்றை

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு 58 ஆளணி இடங்கள் உருவாக்க அனுமதி

## வடக்கு மாகாண ஆளுநரின் முயற்சியை அடுத்து

யாழ்ப்பாணம், ஜூன். 20

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் வலியுறுத்தல்களின் பலனாக, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்குப் புதிதாக 58 ஆளணி இடங்களை உருவாக்கி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அனுமதியளித்துள்ளது.

வடக்கு மாகாணத்துக்கான ஆளணி வெற்றிடங்கள் மற்றும் தேவைகள் குறித்து ஆளுநரால் விடுக்கப்பட்ட தொடர்ச்சியான கோரிக்கைகளையடுத்து, அது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளால் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் பயனாக, சுமார் 13 ஆண்டுகளின் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் வடக்கு மாகாணத்துக்கு நேரடியாகப் பயணம் செய்து கள ஆளணி மீளாய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த ஜனவரி 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை இந்த விசேட கள மீளாய்வுப் பணிகள் இடம்பெற்றன. இந்தக் களப் பயணத்தின்போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைத் தேவைகளைக்கருத்திற்கொண்டே இந்தப் புதிய ஆளணி அதிகரிப்புக்கான அனுமதி தற்போது வழங்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல் திட்டம் முன்னெடுக்கப்பட்டபோது, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் "பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மகப்பேறு சிறப்பு சிகிச்சை நிலையம்" புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. எனினும், கடுமையான ஆளணிப் பற்றாக்குறை காரணமாக இது இதுவரை முழுமையாகச் செயற்பட முடியாமல் மிகப் பெரிய சவால்களை எதிர்கொண்டு வந்தது.

ஆளுநர் அவர்களின் தீவிர முயற்சியால் தற்போது கிடைக்கப்பெற்றுள்ள இந்தப் புதிய ஆளணி அனுமதியின் ஊடாக, குறித்த பெண்கள் சிறப்பு மருத்துவமனையை முழுமையாக இயங்கச் செய்து, மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கான நிரந்தரத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பொதுத் திறைசேரியின் கீழ் இயங்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கடந்த 18ஆம் திகதி இது தொடர்பான உத்தியோகபூர்வ அனுமதி கடிதம் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 325 இலிருந்து 383 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவாக இந்தப் புதிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தனது கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# நல்லிணக்கம், சமூக நீதிக்கான பன்முக செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஜூன். 20

நல்லிணக்கம் மற்றும் சமூக நீதிக்கான பன்முக செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் மரியன்னை பேராலய மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன், நல்லிணக்கம் மற்றும் சமூக நீதிக்கான பன்முக செயற்பாடுகள், சொண்ட் நிறுவனத்தின் ஊடாக யாழ்ப்பாண சர்வ மதக் குழுவுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழான கூட்டம் மரியன்னை பேராலய மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் திட்ட உத்தியோகத்தர் முனிஃப் ரஹ்மான், கூட்டத்தை நெறிப்படுத்தினார்.

சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசாவால், நல்லிணக்க செயற்பாடுகளை ஏற்படுத்த, யாழ்ப்பாண மாவட்ட சர்வ மத குழு செய்யவேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

ஆரம்ப உரையை யாழ்ப்பாணம் மரியன்னை பேராலய பங்குத்தந்தை ஜெரோ செல்வநாயகம் அடிகளார் நிகழ்த்தினார்.

இதில் மதத் தலைவர்கள், யாழ். மாவட்ட சர்வ மத குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

(அ)

# செருப்பு மாலையிட்ட தனது பதாகையை கிழித்து எடுத்து சென்ற அர்ச்சுனா எம்.பி.





யாழ்ப்பாணம், ஜூன். 20

யாழ்ப்பாணத்தில் செருப்பு மாலை அணிவித்திருந்த தனது படம் பொறித்த பதாகையை கிழித்து காரில் எடுத்துச் சென்றுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன்.

யாழ்ப்பாண நகரை அண்டிய பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை அர்ச்சுனா இராமநாதனின் 10 அடி உயரப் பதாகை வைக்கப்பட்டு, அதற்கு செருப்பு மாலை அணி விக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தகாத வார்த்தைப் பிரயோகங்கள், சபை நாகரீகமின்றிச் செயற்படுதல், கூட்டங்களைக் குழப்புதல் போன்ற செயல்களில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் செயற்பட்டு வருவதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் மிக மோசமான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டு இருந்தமை தொடர்பான காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியாகி கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், அர்ச்சுனாவின் 10 அடி உயரப் பதாகைக்கு செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு பிரதான வீதியில் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தது.

காலை 10 மணியளவில் பதாகை வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு தனது காரில் வந்த அர்ச்சுனா இராமநாதன், பதாகையை கிழித்து தனது காரில் எடுத்து சென்றுள்ளார்.

(அ)

# யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உட்கட்டமைப்பு திட்ட முன்னேற்றங்கள் ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூன். 20

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சரும், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் வட மாகாண ஆளுநரும், ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான நா.வேதநாயகனின் பங்குபற்றுதலு டன் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான ம. பிரதீபன் வரவேற்புரையாற்றியதைத் தொடர்ந்து, கூட்டம் ஆரம்பமானது.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வைத்தியர் சண்முகநாதன் சிறீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், அர்ச்சுனா இராமநாதன் வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர், பிரதம செயலாளர், மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், வட மாகாண கடற்படைத் தளபதி, பிரதி பொலிஸ்மா அதிபர், முப்படைகளின் அதிகாரிகள், பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட புதிய நுழைவாயில் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஜூன். 20

கிளிநொச்சியில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கான நுழைவாயிலை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் விவசாய பீடாதிபதி கந்தையா பகீரதன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் தி.வேல்நம்பி பங்கேற்று, நுழைவாயிலை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், விவசாய பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

(அ)

# 10 தொன்னுக்கும் அதிகமான போதைப்பொருள் கடந்த சில மாதங்களில் மாத்திரம் கைப்பற்றல்!

கொழும்பு, ஜூன். 20

"ஒன்றிணைந்த தேசம்" என்ற தேசிய போதைப்பொருள் ஒழிப்பு விசேட திட்டத்தின் கீழ், கடந்த சில மாதங்களில் மாத்திரம் பத்து தொன்னுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் அதிரடியாக கைப்பற்றப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற முற்போக்கு மறுசீராய்வுத் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த விபரங்களை வெளியிட்டுள்ளார்

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட ஒழிப்பு நடவடிக்கையின் மூலம், இதுவரையான காலப்பகுதியில் 2100 கிலோகிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளும், 1950 கிலோகிராம் ஹெரோயினும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், சுமார் 5800 கிலோகிராம் கஞ்சாவும், 280 கிலோகிராமுக்கும் அதிகமான கொக்கெய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளதுடன், 17 இலட்சத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளும் இந்த விசேட சோதனைகளின்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.06.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 06

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஊடகவியலாளர்களுக்கான உத்தேச பட்டய நிறுவனத்தின் நோக்கம்?

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கான பட்டய நிறுவனம் (Charted Institute of Sri Lanka Media Professionals) என்ற சட்டரீதியான கூட்டிணைவு அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஜூன் 11 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிட்ட சட்டமூல வரைவு ஊடகத்துறை மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசாங்கத் தரப்பில் அளிக்கப்பட்டிருக்கும் விளக்கத்தின் பிரகாரம், ஊடகத் துறையில் உயர் தொழில்முறைத் தரங்களை (Professional Standards) அறிமுகப்படுத்திப் பேணுதல் ஊடகவியலாளர்களுக்கான கல்வி, பயிற்சி மற்றும் தார்மீக நடத்தை விதிகளை மேம்படுத்துதல் ஊடகவியலாளர்களின் தொழில்சார் உரிமைகளையும் பொறுப்புக்களையும் சட்ட வரம்புக்குள் முறைப்படுத்துதல் ஆகியவையே இந்த பட்டய நிறுவனத்தை அமைப்பதற்கான நோக்கங்கள் என்று கூறப்படுகிறது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியானதில் இருந்து இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கமும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களும் இதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து, வரைவை உடனடியாக வாபஸ் பெறுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

வரைவின் பிரகாரம் உத்தேச பட்டய நிறுவனத்தை வழிநடத்துவதற்கான “இடைக்கால சபை” ஊடகத்துறை அமைச்சரினால் நேரடியாக நிருவகிக்கப்படும். இந்த ஏற்பாடு நிறுவனத்தின் சுயாதீனத்தன்மையை முற்றாகப் பாதிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

ஊடகவியலாளர்கள் “தொழில்சார் முறைகேடுகளில்” (Professional misconduct) ஈடுபட்டால் அவர்களின் அங்கீகாரத்தை இரத்துச் செய்யவோ அல்லது இடைநிறுத்தம் செய்யவோ இந்த நிறுவனத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், “முறைகேடு” என்பதற்கு தெளிவான வரையறை சட்டமூல வரைவில் இல்லை. இது நாளடைவில் ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கான ஒரு ஆயுதமாக மாறக்கூடிய ஆபத்து இருப்பதாக ஊடகத்துறை அமைப்புக்கள் எச்சரிக்கை செய்கின்றன.

எழுத்தாளர்கள், உள்ளடக்க உருவாக்குநர்கள் (Content creators), அறிவிப்பாளர்கள் மற்றும் ஊடக நிறுவன உரிமையாளர்கள் என்று ஊடகத்துறையோடு தொடர்புடைய பதினான்கிற்கு மேற்பட்ட பிரிவினர் உத்தேச பட்டய நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஊடகத்துறை மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் கொண்டு வந்த இணையவழி பாதுகாப்பு சட்டத்தை (Online Safety. Act) சட்டத்தை நீக்குவதாக உறுதியளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியளித்தது. ஆனால், தற்போது அரசாங்கம் ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த ஊடகவியலாளர்களுக்கான பட்டய நிறுவனச் சட்டமூலத்தின் ஊடாக மறைமுகமாக முயற்சிக்கிறது என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஊடகத்துறை அமைப்புக்கள் இணைந்து உருவாக்கும் சுய கட்டுப்பாட்டு அமைப்பே (Self - regulatory body) சுயாதீனமான ஊடக ஒழுங்கமைப்புக்கு சிறந்தது என்பதும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் கூடிய சட்டரீதியான அமைப்புக்கள் ஊடக சுதந்திரத்துக்கு ஆபத்தானவை என்பதுமே ஊடகத்துறை சார் அமைப்புக்களின் உறுதியான நம்பிக்கையாக இருந்துவருகிறது.

புதிய சட்டமூல வரைவு வர்த்தமானியில் வெளியடுவதற்கு முன்னதாக அரசாங்கம் ஏற்கெனவே பல வருடங்களாக இயங்கிவரும் சுயாதீன அமைப்புக்களான இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு உட்பட ஊடகத்துறைசார் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் ஆலோசனை கலந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது உத்தேச பட்டய நிறுவனம் ஊடக சுந்திரத்துக்கு ஆபத்தாக அமையலாம் என்ற அச்சத்தை வலுப்படுத்துகிறது.

# பேரழிவு, விசாரணைகள் மற்றும் அவதூறுகள்

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்த சமூக ஊடக விவாதங்கள், அரசியல் தலைவர்களையும் மதத் தலைவர்களையும் இலக்காகக் கொண்ட அவதூறான தாக்குதல்களாக மாறி, மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளன. இந்தச் சூழ்நிலை மேலும் மோசமடைவதற்கான சாத்தியக்கூறுகள் தாராளமாகக் காணப்படுகின்றன.

சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் எவ்வித விதிகளுக்கோ அல்லது கட்டுப்பாடுகளுக்கோ உட்படாமல் தன்னிச்சையாகச் செயற்படுவதால், இந்த அவதூறுகளுக்கு உள்ளாகுபவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

கொழும்பு பேராயர் அதிவணக்கத்திற்குரிய மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சில குற்றச்சாட்டுகளுக்கு, கொழும்பு மறைமாவட்டத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ மறுப்புத் தெரிவித்ததுடன், ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து நடைபெற்று வரும் விசாரணைகள் தொடர்பான கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தினார்.

அரசினால் வழங்கப்பட்ட பாதுகாப்புப் பிரிவினரிடமிருந்து கர்தினால் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்த முன்கூட்டிய தகவல்களைப் பெற்றிருந்தார் என்றும் அதனால்தான் அவர் 2019 ஈஸ்டர் ஞாயிறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை என்றும் சமூக ஊடகங்களில் பரவி வரும் குற்றச்சாட்டுகளை அவர் வன்மையாக மறுத்தார். 2019 பேரழிவிற்குப் பின்னரே கர்தினாலுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டிய அருட்தந்தை காமினி பெர்னாண்டோ, எனவே விசேட பாதுகாப்புப் பிரிவினருக்கு பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறக்கூடிய சாத்தியம் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது என்றும், அவரது பாதுகாவலர்கள் அவருக்கு அச்சுறுத்தல் குறித்து எச்சரித்திருந்தனர் என்றும் கூறப்படும் வாதம் முற்றிலும் ஆதாரமற்றது எனக் குறிப்பிட்டார்.

அவரது இந்த வாதம் தர்க்க ரீதியானதாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

கர்தினாலோ அல்லது திருச்சபையின் வேறு எந்தவொரு தலைவரோ, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன மற்றும் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர ஆகியோரை எந்தவொரு பதவிகளிலும் நியமிக்குமாறு அரசாங்கத்திடம் ஒருபோதும் கோரவில்லை என்பதை அருட்தந்தை பெர்னாண்டோ மீண்டும் வலியுறுத்தினார்.

கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தினால் ஈஸ்டர் ஞாயிறு பேரழிவு விசாரணைப் பிரிவிலிருந்து நீக்கப்பட்ட புலனாய்வாளர்களிடமே, இந்தத் துயரச் சம்பவம் குறித்த புதிய விசாரணைகளை ஒப்படைக்குமாறு மாத்திரமே கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

**அமைச்சர் பிமால்**

ரத்நாயக்க பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில், கர்தினாலின் வேண்டுகோளுக்கு இணங்கவே செனவிரத்ன மற்றும் அபேசேகர ஆகியோரை அரசாங்கம் முக்கிய பதவிகளில் நியமித்துள்ளதாகக் குறிப்பிட்டதை ஒரு ஊடகவியலாளர் சுட்டிக் காட்டியபோது, திருச்சபைத் தலைவர்களால் எந்தவொரு குறிப்பிட்ட நபர்களின் பெயர்களும் குறிப்பிடப்படவில்லை என்பதை அருட்தந்தை பெர்னாண்டோ திட்டவட்டமாகக் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிப்பதாகக் கூறிக்கொண்டு, தனது அரசியல் நலன்களை முன்னெடுப்பதற்காக தேசிய மக்கள் சக்தியின் இரு உறுப்பினர்களை பொதுப் பாதுகாப்புத் துறையின் உயர் பதவிகளுக்கு நியமிக்க, திருச்சபைத் தலைவர்களின் கோரிக்கையை அரசாங்கம் ஒரு சாக்காகப் பயன்படுத்தியதா?

ஊடகவியலாளர் சந்திப்பில் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ வெளியிட்ட அறிக்கைகளின்படி, செனவிரத்ன மற்றும் அபேசேகர ஆகியோரின் ஓய்வுக்குப் பின்னரான நியமனங்களையும், ஈஸ்டர் ஞாயிறு பேரழிவு விசாரணைகளில் அவர்களின் பங்களிப்பையும் திருச்சபைத் தலைவர்கள் ஆதரிக்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்த விவகாரத்தில் அவர்களின் நிலைப்பாடு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாக அமையும்.

ஈஸ்டர் ஞாயிறு பேரழிவு விசாரணைகளிலிருந்து அபேசேகர மற்றும் செனவிரத்ன ஆகியோர் ஏன் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு வலுவான காரணங்கள் உள்ளன. 2019 ஏப்ரில் மாதத்தில் அவர்கள் முறையே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சி.ஐ.டி) பணிப்பாளராகவும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் கடமையாற்றினர். இந்தத் திணைக்களம் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதுடன், வரவிருக்கும் தாக்குதல்கள் குறித்த எச்சரிக்கைகள் கிடைத்திருந்தும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கடுமையான குற்றச்சாட்டும் நிலவுகிறது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவும் 2019 பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, அச்சுறுத்தல் குறித்த உளவுத்துறைத் தகவல்கள் இருந்தபோதிலும், 2019 ஈஸ்டர் ஞாயிறன்று உயிர்களைப் பாதுகாக்கத் தவறிய மற்ற அனைத்துத் தரப்பினருக்கும் எதிராக சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், அபேசேகரவும் செனவிரத்னவும் தேசிய மக்கள் சக்தியின் தீவிர உறுப்பினர்களாக மாறி, 2024 ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திசநாயக்கவிற்காக தீவிரமாகப் பிரசாரம் செய்தனர். அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் “ஓய்வுபெற்ற பொலிஸ் கூட்டு அமைப்பின்” முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர், அந்த அமைப்பிற்கு செனவிரத்ன தலைமை தாங்கினார்.

ஊடக அறிக்கைகளின்படி, உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு சத்தியக்கடதாசிகளில் அவர்களே இதனைத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் இந்த இரு அரசியல்வாதிகளையும் ஓய்விலிருந்து மீண்டும் வரவழைத்து, அவர்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் நியமித்துள்ளதுடன், தாங்கள் தடுக்கத் தவறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட அதே உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் பொறுப்பையும் அபேசேகரவிடம் ஒப்படைத்துள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, இவர்களின் தலையீடு இந்த விசாரணையின் நம்பகத்தன்மையை கடுமையாக சீர்குலைத்துள்ளது.

இதற்கிடையில், 2019 ஈஸ்டர் ஞாயிறு அன்று சாத்தியமான பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து விசேட பாதுகாப்புப் பிரிவுகளுக்கு (VIP security divisions) எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் அவர்கள் பாதுகாக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும இந்த எச்சரிக்கைகளைத் தெரிவிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்ததாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இந்திக அநுருத்த ஹேரத்தினை கூற்றை மேற்கோள் காட்டி, 22 ஜூலை 2025 அன்றைய எமது தலையங்கக் கருத்தில் நாங்கள் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தோம். தனக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு குண்டுத் தாக்குதல்கள் குறித்த எச்சரிக்கைகள் கிடைத்திருந்த போதிலும், அந்த அச்சுறுத்தல் குறித்து தனக்கு அறிவிக்க வேண்டாம் என அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

கட்டுவாப்பிட்டி தேவாலயம் தாக்கப்பட்ட போது அவர் நீர்கொழும்பில் உள்ள ஒரு தேவாலயத்தில் இருந்தார், பேரழிவு நடந்த பின்னரே அவருக்கும் ஏனைய. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த எச்சரிக்கைகள் குறித்து அறிவிக்கப்பட்டது. இந்த அச்சுறுத்தல் குறித்து தமக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தால், தாங்கள் நிச்சயமாக திருச்சபைத் தலைவர்களை எச்சரித்திருப்போம் என்றும், பேரழிவைத் தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களிடமிருந்து பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்த எச்சரிக்கைகளை மறைக்குமாறு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டது யார்? உயிர்த்த ஞாயிறு துயரத்திற்கு வழிவகுத்த பாதுகாப்புத் தோல்வியின் இந்த அம்சமும் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும். ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரி கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதேவேளை,

275க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிவாங்கி, நூற்றுக்கணக்கானோரை படுகாயப்படுத்திய இந்த பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறிய அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

(தி ஐலண்ட் தலையங்கம், 18 ஜூன் 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 20 சனிக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 06
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சஷ்டி




**மேடம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**இடபம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**சிம்மம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும்.

**கன்னி**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**விருச்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**தனுசு**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதர வகையில் நன்மை உண்டு. உத்தியோகத்தில் உதவுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப் ஆக போய் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

**கும்பம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**மீனம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். கனவு நனவாகும் நாள்.

# குறிகட்டுவான் சுற்றுவட்ட பகுதியில் அம்மன் சிலை அமைக்க தீர்மானம்!

## வேலணை பிரதேச சபையில் நிறைவேற்றம்

*யாழ்ப்பாணம், ஜூன். 20*

யாழ்ப்பாணத்தில் புனரமைக்கப்பட்டுள்ள குறிகாட்டுவன் இறங்குதுறை சுற்றுவட்ட பகுதியில் நயினாதீவு நாகபூசணி அம்மன் சிலை வைப்பதற்கு வேலணை பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தனியொரு மதத்தின் அடையாளமாக அம்மன் சிலை வைக்க முடியாது எனவும், நான்கு மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிலை அல்லது பொதுவான சிலை ஒன்றை அமைக்கவேண்டும் எனவும் தேசிய மக்கள் சக்தியினர் தமது நிலைப்பாட்டை முன் வைத்தனர்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன் தினம் சபை மண்டபத்தில் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, குறிகட்டுவான் இறங்குதுறை சுற்றுவட்டத்தில் தீவகத்தின் அடையாளமான நயினாதீவு நாகபூசனி அம்மனின் சிலை வைக்கப்படவேண்டும் வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினர் சிவகுமாரனால் முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு பல உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில்,தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நயினாதீவு என்பது ஒரு சுற்றுலாத் தளம். இங்கு ஒர் மதத்தின் அடையாளத்தைக் காட்சிப்படுத்துவது பொருத்தமற்றது. நயினாதீவில் 4 மதங்கள் சார் மக்கள் வாழ்கின்றனர். அதேபோல் அனைத்து மதம் சார் நபர்களும் வருகின்றனர்.

எனவே அங்கு 4 மதங்களின் அடையாளங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக அல்லது பொதுவான தீவகத்தின் அடையாளம் ஒன்று வைக்கவேண்டும் என்றனர்.

இதையடுத்து சபையில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கும் ஏனைய கட்சிகளின் சார் உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

ஆனாலும் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் நாகபூசனி அம்மனின் சிலையே வைக்கப்படவேண்டும் என்ற எடுத்த நிலைப்பாட்டால் அது தீர்மானமாக வேலணை பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டது.


இதையடுத்து அதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என தவிசாளர் அசோக்குமார் அறிவித்தார்.

(அ)

# வடக்கில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகள், வலைகள் வழங்கல்

*யாழ்ப்பாணம், ஜூன். 20*

கடந்த வருடம் ஏற்பட்ட டித்வா புயலால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு படகுகள் மற்றும் வலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காரைநகர் சீநோர் படகு தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து கொண்டு மீனவர்களுக்கான படகுகள் மற்றும் வலைகளை வழங்கினார்.

இதன்போது முதலாம் கட்டமாக ரூபா 1.800 மில்லியன் பெறுமதியான 32 வலைகளும், ரூபா 8.640 மில்லியன் பெறுமதியான 18 படகுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதில், தலா ரூபா 480,000.00 பெறுமதியான 18 படகுகளில், யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு 03 படகுகளும் ( நெடுந்தீவிற்கு 02 படகுகளும், காரைநகருக்கு 01 படகுகள்), முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 13 படகுகளும், மன்னார் மாவட்டத்திற்கு 02 படகுகளுமாக வழங்கி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.சிவகரன், காரைநகர் பிரதேச செயலாளர் நிரஞ்சனா நவரத்தினம், காரைநகர் சீ நோர் படகு தொழிற்சாலை பணிப்பாளர் றோகண, சீ நோர் படகு திருத்தும் நிறுவனத்தின் தலைவர் வசந்தமானபெரும, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் அகிலன், முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுதாகர், மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரமேஸ்கண்ணா, திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

(அ)

## சில்லாலை சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவு

*யாழ்ப்பாணம், ஜூன். 20*

சில்லாலை வடக்கு பிரிவில் அமைந்துள்ள சாந்தை கிராமத்தில், சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு விழா நேற்று முன் தினம் நடைபெற்றது.

1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இச் சனசமூக நிலையம், கிராமத்தின் சமூக, கலாசார மற்றும் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகின்றது. சாந்தை கிராமம் பல்வேறு துறைகளில் சாதனைகள் படைத்த நபர்களை உருவாக்கிய பெருமைக்குரிய இடமாக விளங்குகிறது.

இதன் 66ஆவது ஆண்டு விழா நிகழ்வில் கிராம மக்கள், முன்னாள் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு நிலையத்தின் சேவைகளையும் சாதனைகளையும் பாராட்டினர். (அ)

## கல்மடுநகர், ரங்கன், பூநகரி பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு

*கிளிநொச்சி, ஜூன். 20*

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்மடுநகர், ரங்கன் குடியிருப்பு மற்றும் பூநகரி பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் தினமும் புகுந்து வரும் காட்டு யானைகள், வீடுகள் மற்றும் பயிர்களுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக மாலை 6 மணி முதல் அதிகாலை வரை குடியிருப்பு பகுதிகளில் சுற்றித் திரியும் யானைகள், மக்களின் உயிர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

வாழ்வாதாரத்திற்காக பயிரிடப்பட்டுள்ள தென்னை, பலா, மரவள்ளி, வாழை உள்ளிட்ட பயன்தரும் பயிர்கள் தினமும் காட்டு யானைகளால் சேதப்படுத்தப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இந்த நிலைமையால் பெரும் பொருளாதார இழப்புகளையும் பாதுகாப்பு அச்சத்தையும் எதிர்கொண்டு வருவதாகக் கூறியுள்ள மக்கள், காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாணய நிதியத்தின் தூதுக்குழுவை சந்தித்த கூட்டு எதிரணி பிரதிநிதிகள்

## அரசின் நிர்வாக தோல்விகள் குறித்து முறையீடு

கொழும்பு, ஜுன். 20

இலங்கையின் கூட்டு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பில் சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவினரை நேரில் சந்தித்து, தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத் தோல்விகள் மற்றும் நிதி முறைகேடுகள் குறித்துக் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு எழுத்துபூர்வமாக முறையிட்டுள்ளனர்

பொதுமக்கள் மீது கடுமையான வரிகள் மற்றும் கட்டண உயர்வுகளைச் சுமத்திப் பெறப்படும் நிதி, தற்போதைய திறந்த நிர்வாகக் கட்டமைப்பின் பல வீனங்களால் வீணடிக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இதன்போது, நிலக்கரி கொள்முதல் முறைகேடுகள், ஒரு பெரல் இருநூற்று எண்பத்தி ஆறு டொலர் வரையிலான அதிக பிரீமியம் பெற்றோலியக் கொள்முதல் மற்றும் ஐந்து மில்லியன் பயோமெற்றிக் மின்-கடவுச்சீட்டு திட்டத்தில் ஏற்பட்டுள்ள சட்டச் சிக்கல்கள் குறித்து விசேடமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், வாகன இறக்குமதி வரி உயர்வு குறித்த ரகசியத் தகவல்கள் கசிந்ததால் சில இறக்குமதியாளர்களுக்குச் சாதகமாக அமைந்தமை மற்றும் கொழும்புத் துறைமுகத்தில் சிவப்பு அலை வரிசையின் கீழ் சோதனையிடப்பட வேண்டிய முந்நூற்று இருபத்தி மூன்று உயர் ஆபத்துள்ள கொள்கலன்கள் தன்னிச்சையாக விடுவிக்கப்பட்டமை குறித்தும் ஐஎம்எஃப் தூதுக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

திறைசேரியிலிருந்து ஆஸ்திரேலியக் கடனுக்காக ஒதுக்கப்பட்ட இரண்டு தசம் ஐந்து மில்லியன் டொலர் நிதி கள்ளக் கணக்கிற்கு மாற்றப்பட்டமை, அஞ்சல் திணைக்களத்தின் மின்னஞ்சல் மோசடியால் 6 இலட்சத்து 25ஆயிரம் டொலர் இழப்பு ஏற்பட்டமை மற்றும் அஸ்வசும, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணினிக் கோளாறுகளால் மில்லியன் கணக்கான பொது நிதி இரட்டிப்பாக விநியோகிக்கப்பட்டமை போன்ற நிதி முகாமைத்துவ தோல்விகளையும் அவர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

எனவே, அரசாங்கத்தின் இத்தகைய நிதி ஓட்டைகளைத் தடுக்கவும், கொள்முதல் வெளிப்படைத்தன்மையைப் பேணவும் நிபந்தனைகளை விதிக்குமாறும், ஓட்டையுள்ள குடத்தில் பொதுமக்களின் வரிப்பணத்தை நிரப்ப அனுமதிக்கக் கூடாது எனவும் கூட்டு எதிர்க்கட்சிகள் சர்வதேச நாணய நிதியத்தை அவசரமாக வலியுறுத்தியுள்ளன. (அ)

# அரசின் முறையான அங்கீகாரம் இன்றி பாடசாலைகளில் அபிவிருத்திக்கு தடை!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவிப்பு



கொழும்பு, ஜுன். 20

பல்வேறு அமைப்புகள் மற்றும் குழுக்களால் முன்மொழியப்படும், அரசாங்கத்தின் முறையான அங்கீகாரத்தைப் பெறாத எந்தவொரு திட்டமும் எந்தக் காரணம் கொண்டும் பாடசாலைகளுக்குள் செயற்பட அனுமதிக்கப்படக் கூடாது என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் உள்ள வடமத்திய மாகாண சபை வளாகத்தில் நடைபெற்ற வடமத்திய மாகாண கல்வி அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக அரசாங்கம் என்ற ரீதியில் பாரிய அர்ப்பணிப்புகளைச் செய்து வருவதாகக் குறிப்பிட்ட பிரதமர், மாணவர்களுக்கு எப்போதும் சிறந்தவற்றையே வழங்க வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே கல்வி சார்ந்த அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வடமத்திய மாகாணத்தின் கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இந்த கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதுடன், தரம் 5 புலமைப்பரிசில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளின் இலக்குகளை அடைவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மாகாண மற்றும் வலய மட்டத்தில் செயல்படுத்தப்படும் பாடம் சார்ந்த திட்டங்களின் தற்போதைய நிலவரங்கள், "டித்வா" சூறாவளியினால் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைப்பது குறித்த விடயங்கள்,

மாகாண கல்வி அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகள், ஆசிரிய-மாணவர் நலன்புரி மற்றும் நிர்வாகப் பிரச்னைகள் தீர்வு ஆகிய விடயங்கள் பிரதமரால் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# எரிபொருள் மானிய ஒதுக்கீடு ஜுலை இறுதிவரை போதும்!

கொழும்பு, ஜுன். 20

தற்போது நடைமுறையிலுள்ள எரிபொருள் மானியத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதாயின், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் எதிர்வரும் ஜுலை மாத இறுதி வரை அல்லது அதற்கு அப்பாலும் போதுமானதாகக் காணப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் கச்சா எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ள புதிய சூழல் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டே, இந்த மானியத் திட்டத்தை நீடிப்பதா இல்லையா என்பது குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவுள்ளதாக அமைச்சர் அனுர கருணாதிலக குறிப்பிட்டார்.

அதிகரித்து வந்த எரிபொருள் செலவிலிருந்து பொதுமக்களுக்கு தற்காலிகமாக நிவாரணம் வழங்குவதற்காகவே இச்சலுகை அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ள நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, இந்த மூன்று மாத காலத் திட்டம் நடப்பு ஜுன் மாத இறுதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், புதிய தீர்மானங்கள் அதன் பின்னரே எட்டப்படும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய மானியக் கட்டமைப்பின் கீழ் ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாயையும், பெற்றோலுக்கு 20 ரூபாயையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்வதுடன், இதற்காக மாதந்தோறும் சுமார் 20 பில்லியன் ரூபாய் செலவை அரசு பொறுப்பேற்று வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து உதவி

கொழும்பு, ஜுன். 20

பிரதேச செயலகங்கள் ஊடாகக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கும் வேலைத்திட்டமொன்று நேற்று முன் தினம் ஜனாதிபதி நிதியத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது.

நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 14 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் இதன்போது வழங்கப்பட்டதுடன், ஜனாதிபதி நிதியத்தினால் இதற்காக 58 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

இதற்கமைய, 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரும் சுமார் 30 மாணவ, மாணவிகளுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி நிதியம் இதற்காக மொத்தமாக 98 இலட்சத்துக்கும் அதிகமான ரூபாயைச் செலவிட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளருமான ரோஷன் கமகே உள்ளிட்ட ஜனாதிபதி நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# படிக்க முடியாத மாணவர்கள் எவரும் இல்லை ஆனால் படிப்பிக்காத ஆசிரியர்கள் உள்ளனர்!

## கிழக்கு ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர



மட்டக்களப்பு, ஜூன். 20

படிக்க முடியாத மாணவர்கள் எவரும் இல்லை. ஆனால் படிப்பிக்காத ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர் என்பது ஒரு திறன். அது ஒரு கலை. அதற்கு பயிற்சிகள் எடுக்கவேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட விவேகானந்தபுரம் பாமகள் வித்தியாலத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 2 மாடிகளைக் கொண்ட பாடசாலைக் கட்டடத்தை திந்து வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை பாடசாலை அதிபர் ஆர்.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாடசாலைக் கட்டடத்தை திறந்து வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி பாடசாலைக் கட்டடத்தை திறந்து வைத்ததில் நான் சந்தோசம் அடைகின்றேன். இவ்வாறான கிராமங்களில் தற்போது பாடசாலை புதிய வகுப்பறை கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அது போல் இந்த பாடசாலையிலும் 5 வகுப்பறைகளை கொண்ட இரண்டு மாடி புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு இப்போது திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் பாடசாலைக் கட்டடங்கள் மாத்திரம் போதாது நாங்கள் பாடசாலையில் கற்கும் காலத்தில் இரண்டு மூன்று வருடங்களாக கட்டடங்கள் இல்லாமல் வெளியில் இருந்துதான் படித்தோம். அதற்கும் சுற்றாடல் கல்வி என ஒரு பதம் இருக்கிறது. ஆனால் இப்போது வெளியே போக முடியாது எனப் பல குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. விளையாட்டுப் போட்டி நடந்தாலும் வெயில் தானே. அதனால் வெளியில் செல்ல முடியாது எனத் தெரிவிக்கின்றார்கள். இப்போது பாடசாலை நடைமுறை கல்வி தொடர்பில் நீண்ட காலமாக கதைக்கப்பட்டு வருகின்றது. இது அனைத்தும் கதை அளவில் மாத்திரம்தான்.

படிக்க முடியாத மாணவர்கள் எவரும் இல்லை ஆனால் படிப்பித்துக் கொடுக்க முடியாத ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர் என்பது ஒரு திறன். அது ஒரு கலை, அதற்கு பயிற்சிகள் எடுக்க வேண்டும். அந்த வகுப்பறையில் எனக்கு படிப்பிக்க முடியாது, இந்தப் பாடம் எனக்கு படிப்பிக்க முடியாது என அதிக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆசிரியர் தொழில் என்பது என்பது ஒரு கலை, அது ஒரு விஞ்ஞானம், அனைவருக்கும் இலகுவில் அது வராது. ஆசிரியர் தொழிலுக்கு விருப்பத்துடன் வரவேண்டும் ஆசிரியர் தொழிலுக்கு விருப்பம் இல்லாமல் வருபவர்களும் உள்ளார்கள், அவ்வாறு வருபவர்கள்தான் ஆசிரியர் தொழிலுக்கு வந்தவுடன் இடமாற்றம் கேட்கின்றார்கள்.

சிலர் வேறு தொழில் கிடைக்கவில்லை என்றால் ஆசிரியர் தொழிலுக்கு வருவார்கள். வேறு தொழில் கிடைக்கவில்லை என்பதற்காகத்தான் நான் ஆசிரியர் தொழிலுக்கு வந்திருக்கின்றேன் என தெரிவிப்பார்கள். அவ்வாறு வரக்கூடாது. முதலாவது தெரிவாக ஆசிரியர் தொழில்தான் இருக்க வேண்டும்-என்றார்.

(அ)

# லீடர் அஸ்ரப் வித்தியாலயத்தில் முஹர்ரம் இஸ்லாமியப் புத்தாண்டு வரவேற்பு விழா!



அம்பாறை, ஜூன். 20

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் சுற்ற றிக்கைக்கு அமைவாக, கல்முனை லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயத்தில் முஹர்ரம் இஸ்லாமிய புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம். ஐ. சம்சு தீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம பேச்சாளராக சாய்ந்தமருது முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம், அல் ஹாபிழ் அல்-ஆலிம் உஸாமா பரீட் கலந்துகொண்டு, இஸ்லாமிய புத்தாண்டின் வரலாறு, அதன் ஆன்மீக முக்கியத்துவம் மற்றும் இளைஞர்கள், மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் தொடர்பாக சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் விசேட அதிதியாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், கிழக்கு மாகாண கணனி தகவல் தொழில்நுட்ப பேரவையின் பணிப்பாளருமான யூ.எல். நூருல் ஹுதா உமர் அவர்கள் கலந்து கொண்டார். மேலும், பாடசாலை பிரதி அதிபர் எம்.எப்.எம்.ஆர். ஹாதீம், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# தொழில் முயற்சியாளர் பயிற்சி வேலைத்திட்டம்

அம்பாறை, ஜூன். 20

சந்தைப்படுத்தல் வேலைத் திட்டத்தின் கீழ் அஸ்வெசும பயனாளி மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் பொருட்டு ஆளுமை விருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பயிற்சி வேலைத் திட்டம் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

சமுர்த்தி திட்ட முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ் இணைப்பில் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சீ.அன்வர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதியாக பிரதேச செயலக கணக்காளர் அமிர் அலி கலந்து கொண்டார்.

தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான தொழில் சந்தை மற்றும் நிதி மேலாண்மை போன்றவை குறித்து இப்பயிற்சி வேலைத்திட்டத்தில் விளக்க விரிவுரை வழங்கப்பட்டதுடன் பேசும் பயிற்சிகள், கேள்வி பதில் ஊடாக நேரடி வழிகாட்டல் போன்றவையும் மேற்கொள்ளப்பட்டு பங்கேற்பாளர்களின் நம்பிக்கையும் திறனும் அதிகரிக்க வளவாளர்களால் விரிவுரைகள் நடத்தப்பட்டன.

தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகார சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சி. எம். நபீல், சிறு கைத்தொழில் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எல். அப்துல் ஜலீல் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டதுடன் சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.எம்.அம்சார், திட்ட உதவியாளர் ஏ.எஸ்.எம். ஜவ்பர், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எஸ். சனுபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ)

# தம்பலகாமம் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பல்வேறு பிரச்னைகள் குறித்து ஆராய்வு



திருமலை, ஜூன். 20

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் வெளி விவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் அருண் ஹேமச்சந்திரா தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் கே.சதிசேகரின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற குறித்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எச். தாலிப் அலி உட்பட திணைக்கள தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், முப்படையினர், பிரஜா சக்தி தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் பிரதேச அபிவிருத்தி மற்றும் பிரஜா சக்தி ஊடான வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் மக்களின் குறைபாடுகள் எதிர்காலத்தில் தீர்வினை பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கம் மூலம் மேற்கொள்ளப்படும் சரோஜா சிறுவர் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் சுமார் 750 இற்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற சிறுவர்கள் காணப்படுவதாகவும் போதைப்பாவனை, அதிக வீதி விபத்துக்கள் மற்றும் களவு தொடர்பிலான விடயங்களையும் தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முன்வைத்தார்.

மேலும் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் நிலவும் வளப் பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை தொடர்பிலும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இது தவிர உட்கட்டமைப்பு, வனப் பாதுகாப்பு, வீதி அபிவிருத்தி, குளங்கள் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திகள் தொடர்பிலும் இங்கு மேலும் கலந்துரையாடப்பட்டன. (அ)

# புனித ஹஜ் பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 20

புனித ஹஜ் - 2027 இல் பங்கேற்க விரும்பும் இலங்கை முஸ்லிம் யாத்திரீகர்களுக்கான ஹஜ் பதிவு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இப்பதிவு இணையவழி மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

ஹஜ் முகவர்கள் அல்லது இடைத்தரகர்கள் மூலம் தங்களது ஹஜ் பதிவுகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

2027 ஆம் ஆண்டு ஹஜ் பயணிகள் பதிவு செய்வது தொடர்பாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஹஜ் பயணிகள் பணத்தைச் ஏலவே செலுத்தி ஏமாறுவதைத் தவிர்க்கவே மேற்கண்டவாறு இலங்கையில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களுக்கும் அனுப்பி வைத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காரைதீவு கண்ணகி இந்துவில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள்

காரைதீவு, ஜூன். 20

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் தூய் மைப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முன் னெடுக்கப்பட்டன.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சு. பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாடசாலை வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் டெங்கு நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு உத்தியோகத்தர்கள், காரைதீவு பொலிஸ் நிலைய அதிகாரிகள், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள், சபை செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்நடவடிக்கையின் போது, சுற்றுப்புற சுகாதாரத்தின் முக்கியத்துவம் மற்றும் நுளம்பு பெருக்கத்தைத் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பாகவும் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

டெங்கு ஒழிப்பு என்பது சுகாதாரத் துறையின் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்பல்ல என்றும், பொதுமக்கள் அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் அதிகாரிகள் வலியுறுத்தினர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### காணாமற்போனோர்...

அமையவே முற்றிலும் சட்டபூர்வமாக இயங்கி வருகிறது.

அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்தினாலும், இது எந்தவொரு இராணுவப் பிரிவுக்கோ, பொலிஸாருக்கோ அல்லது அரசியல் தரப்புக்கோ சாதகமாகச் செயல்படாத ஒரு சுயாதீனமான ஆணைக்குழு ஆகும்.

பாதிக்கப்பட்டவர்களின் உண்மை நிலையைக் கண்டறிந்து, தவறிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

தற்பொழுது மக்கள் மத்தியில் இதன் செயல்பாடுகள் குறித்து நேர்மறையான எண்ணம் உருவாகியுள்ளதால், மாவட்ட ரீதியாக நடத்தப்படும் அமர்வுகளுக்கு மக்கள் அதிகளவில் வருகை தந்து வருகின்றனர்.

தினசரி 100 பேருக்கு அழைப்பு விடுக்கப்படும் நிலையில், 85 இற்கும் அதிகமான குடும்பங்கள் நேரில் வந்து சாட்சியங்களையும் தகவல்களையும் வழங்கி வருகின்றன.

மக்களிடையே நிலவும் தவறான புரிதல்களை நீக்கி, உண்மையைச் சமூகத்திற்குக் கொண்டு சேர்க்கும் முக்கியப் பங்கு ஊடகவியலாளர்களுக்கு உண்டு-என்றார். (அ)

### செம்மணி மனித...

அகழ்வுப் பணியின் 29ஆம் நாள் அகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது நீதி அமைச்சர் உள்ளிட்ட விசேட குழுவினர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளிட்ட குழுவினர் புதைகுழி அகழ்வுப் பணிகளை பார்வையிட்டனர்.

இதுவரையிலான அகழ்வுப் பணிகளின்போது, 394 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 370 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

### செம்மணிப் புதைகுழி...

அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணிப் புதைகுழி தொடர்பில் நீதி நிலை நாட்டப்படும். அதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் நீதி அமைச்சு செய்யும்.

கடந்த கால அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றியது போன்று, எங்கள் அரசாங்கமும் தமிழ் மக்களை ஏமாற்றமாட்டாது. எங்கள் அரசாங்கத்தை தமிழ் மக்கள் முழுமையாக நம்பலாம்.

வடக்கு தெற்கு என்ற பாகுபாடு இன்றி, குற்றம் செய்த அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும். அதற்காக விசாரணைகள் இன்றி எவரையும் கைது செய்து சிறையில் அடைக்க முடியாது.

இராணுவத்தினர், படுகொலைகளில் ஈடுபட்டு இருந்தால் அதற்கான ஆதாரங்களை முன் வைத்தால், நிச்சயமாக நாம் இராணுவத்தினருக்கு எதிராகவும் நடவடிக்கைகளை எடுப்போம்-என்றார். (அ)

### இரண்டாம் தரப்...

காணாமல் போன ஆட்களை பதிவு செய்யும் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற வேளை அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில், இந்த காணாமல் போனவர்கள் விடயத்தில் கடந்த கால அரசியல்வாதிகள் முயற்சி எடுத்திருந்தால், தீர்வை கண்டிருக்கமுடியும்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் சகவாழ்வு நல்லிணக்கம் ஒற்றுமை என்பவற்றை அமைப்பதற்கு முடியாமல் போயிருக்கின்றது.

இந்த அரசாங்கம் அதற்கான முயற்சிகளை எடுக்கும் தமிழர்களை, இரண்டாம் பிரஜைகளாக பார்க்கின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

அனைவரும் ஒற்றுமையுடன் பார்க்கப்படுவார்கள்.

கோட்டாபய சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்றிருந்ததாக தெரிவித்து வந்தாரே தவிர, இந்த அலுவலகங்களை செயற்பட விடவில்லை.

வெளிநாட்டு நிறுவனங்களினுடைய அழுத்தங்கள் காரணமாகவே, இந்த அலுவலகங்கள் பேரளவில் ஆரம்பிக்கப்பட்டன-என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான திலகநாதன் மற்றும் இளங்குமரன், காணாமல் போன அலுவலகத்தின் தலைவர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (அ)

### அவதூறுகளை...

தன்னைத் தொந்தரவு செய்யும் வகையில் சமூக வலைத்தளங்கள் வாயிலாக அவதூறுகளை மேற்கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன், மருத்துவர் ஜெயக்குமார் ஆகியோருக்கு எதிராக தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவு மருத்துவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு தீர்ப்பு கட்டளைக்காக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் நீதிவான் நஜ்மி ஹூஸைசன் தலைமையில் எடுக்கப்பட்டது.

இதன்போது முதலாவது எதிர்த்தரப்புவாதியான மருத்துவர் ஜெயக்குமார் பேசிய கருத்துகள் தவறானவை அல்ல என நீதிமன்றம் நம்புவதாகக் கருதி அவர் வழக்கிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டார்.

இரண்டாவது எதிர்த்தரப்புவாதியான மருத்துவர் அர்ச்சுனா தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் அவருக்குப் பேச்சுச் சுதந்திரம் உள்ளது என விளக்கமளிக்கப்பட்டது.

எனினும் அதனை வன்மையாக நிராகரித்த நீதிவான், நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், சாதாரண குடிமகனாக இருந்தாலும் பேச்சுச் சுதந்திரத்துக்கு என்று ஒரு வரையறுக்கப்பட்ட எல்லை உண்டு என சுட்டிக்காட்டினார்.

எந்தவித முறையான சான்றுகளும் இன்றி ஒரு மருத்துவ அதிகாரியின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்தோ, அல்லது அவர் ஊழல் புரிந்தார் என்றோ அவதூறு பரப்ப யாருக்கும் உரிமை இல்லை.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவருக்கு எதிராக இனி எவ்விதமான அவதூறு மற்றும் போலிப் பரப்புரைகளையும் சமூக ஊடகங்களிலோ அல்லது வெளியிலோ முன்னெடுக்கக்கூடாது. அத்துடன் பாதிக்கப்பட்ட பெண் மருத்துவருக்கு எதிராக இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து அவதூறான மற்றும் போலிப் பிரசாரக் காணொலிகளையும் உடனடியாக நீக்க வேண்டும் என்றும் நீதிவான் கட்டளையிட்டார்.

குறித்த வழக்கில் வழக்கு தொடுநர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி லக்சான் டயஸின் வழிகாட்டலில் சட்டத்தரணி கனகலிங்கம் கிஷோபனாவும், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் சார்பில் சட்டத்தரணி கௌசல்யா நரேந்திரனும் ஆஜராகினர்.

இதேவேளை, புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ், இலங்கையில் தீர்ப்பளிக்கப்பட்ட இரண்டாவது விசேட வழக்கு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### நெடுந்தீவில்...

வந்தன.

இந்நிலையில் நேற்று அவரது சடலமாக தமிழகத்தின் நாகபட்டினம் கடற்கரையில் கரையொதுங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

உரிய விசாரணைகளின் பின்னர் அவரது சடலத்தை இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-05)

# யாழ். விபத்தில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன். 20

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி பாரதி வீதியைச் சேர்ந்த 21 வயதான குறித்த இளைஞன் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு வாகன பயிற்சியை மேற்கொண்டவேளை குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பண்ணைப் பகுதியில் வாகனப் பயிற்சியை மேற்கொண்டதன் பின்னர், வாகனத்திலிருந்து வீதியில் இறங்கியபோது வீதியின் பின்புறத்தில் இருந்து வந்த லொறி மோதியதில் குறித்த இளைஞர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

விபத்து சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாட்டு செலாவணி வெளியேற்றம் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன். 20

வாகன இறக்குமதிக்கான சுங்க இறக்குமதி வரிகள் மீது தற்காலிக கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் வாகன இறக்குமதிக்கான தினசரி வெளிநாட்டுச் செலாவணி வெளியேற்றம் 4 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் கீழ் குறைந்துள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் தாக்கம் குறித்து கருத்து தெரிவித்த அவர், இக்கட்டணம் விதிக்கப்பட்ட போதிலும், ஒரே நாளில் 88 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் கடிதங்கள் வாகன இறக்குமதிக்காக திறக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும், இந்தக் கொள்கை மாற்றமானது இறக்குமதி சார்ந்த வெளிநாட்டுச் செலாவணிச் செலவினங்களைக் குறைக்கத் தொடங்கியுள்ளதாக அவர் கூறினார்.

பிரதி அமைச்சரின் கூற்றுப்படி, கடந்த ஆண்டில் வாகன இறக்குமதிக்காக இலங்கை நாளொன்றுக்கு சராசரியாக 5.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டில், வாகன இறக்குமதிக்காகத் திறக்கப்பட்ட கடன் கடிதங்களின் மதிப்பு அதிகரித்ததன் காரணமாக, இந்தத் தொகை நாளொன்றுக்கு சுமார் 7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்திருந்தது. இருப்பினும் தற்போது இது குறைந்து வருகின்றது.

உதாரணமாக, ஜூன் மாதத்தில் தினசரி சராசரி செலவினம் 4 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே காணப்பட்டது. எனவே, இதன் தாக்கம் தெரிகின்றது டன், நாம் சரியான தீர்மானங்களை எடுத்துள்ளோம் என்றே நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

### படையினருக்கு காணி...

ஒருங்கிணைப்புக் குழு நிறைவேற்ற முற்பட்டது.

இந்நிலையில் அதற்கு கடும் எதிர்ப்பு தோன்றியதை அடுத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

குறிப்பாக நெடுந்தீவில் உள்ள அரச காணி ஒன்றிலிருந்து கடற்படையினருக்கு ஒரு ஏக்கர் காணி வழங்க பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான அனுமதியை வழங்குமாறும் கோரப்பட்டது.

இந்நிலையில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்களுக்கு காணி இல்லாதிருக்கும் நிலையில் அரச படையினரின் தேவைக்காக காணி வழங்க முடியாது. இது யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தும்.

அத்துடன் மக்கள் காணி நிலங்களிலிருந்து அரச படையினர் வெளியேறவேண்டும் என்று எமது மக்கள் நாளாந்தம் போராடிவரும் நிலை ஒருபுறம் இருக்க, மறுபுறம் காணி இன்றி அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாது பல ஆயிரம் மக்கள் துன்பங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் மக்கள் காணிகளை மக்களுக்கு வழங்காமல் படைத் தரப்புக்கு வழங்க முடியாது என அரச தரப்பு மற்றும் பொது அமைப்புகள் தரப்பினர் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது அரச தரப்பு ஆதரவாளர் ஒருவருக்கும் காணி விடுவிக்கப்படாமையால் பாதிப்புற்றுள்ள தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தடுக்க ஒருங்கிணைப்புக் குழு தலைவரால் மேலதிக பொலிஸார் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

### செம்மணி சென்ற...

அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளிட்ட குழுவினரின் கவனத்தை ஈர்க்கும் முகமாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வாய்வு பணிகளை நேற்று வெள்ளிக்கிழமை நீதி அமைச்சர் தலைமையிலான விசேட குழுவினர் மற்றும் காணமால் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தின் ஆணையாளர்கள் பார்வையிட நீதிமன்று அனுமதித்து இருந்தது.

இந்நிலையில் புதைகுழியை பார்வையிட வரும் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் முகமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அப்பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி வேண்டும் , புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் வேண்டாம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## எல் நினோ தாக்கத்தினால் ஒக்ரோபரில் இலங்கையில் அதிக மழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, ஜூன். 20

வலுவடைந்து வரும் எல் நினோ காலநிலை நிகழ்வு மற்றும் இந்தியப் பெருங்கடல் இருமுனையகத்தின் மாற்றங்கள் காரணமாக, நடப்பு ஆண்டின் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இலங்கையில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் கடலோரப் பெருங்கடலியல் பேராசிரியர் சரித பத்தியராச்சி தெரிவித்துள்ளார்.

வலுவடைந்து வரும் எல் நினோ நிலைமைகளுடன், இந்தியப் பெருங்கடல் இருமுனையகத்தின் பலவீனமான நேர்மறை நிலையும் இணைந்து எதிர்வரும் மாதங்களில் இலங்கையின் வானிலை வடிவங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் சரித பத்தியராச்சியின் கணிப்பின்படி,

செப்ரெம்பர் வரை (தென்மேற்கு பருவக்காற்று காலம்) இந்த காலப்பகுதியில் வழக்கமாகப் பதிவாகும் மழைவீழ்ச்சி இந்த முறை குறைய வாய்ப்புள்ளது.

ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் வழக்கத்தை விட அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதுடன், அது 100 மில்லிமீற்றரைக் கடக்கக்கூடும்.

அடுத்த வருட ஆரம்பம் (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) மீண்டும் சராசரியை விடக் குறைவான மழைவீழ்ச்சியே பதிவாக வாய்ப்புள்ளது.

அவுஸ்திரேலிய வானிலை ஆய்வுப் பணியகம் ஜூன் 14ஆம் திகதி சேகரித்த தரவுகளின் அடிப்படையில் தனது காலநிலை முன்னறிவிப்பை மறுபரிசீலனை செய்துள்ளது.

அதன்படி , பசுபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை சராசரியை விட 0.92° செல்சியஸ் ஆக உயர்ந்துள்ளது.

முன்னதாகக் கணிக்கப்பட்டதை விட எல் நினோ நிகழ்வு அதிக வலுவடையக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதமளவில் மத்திய பசுபிக் பெருங்கடலின் வெப்பநிலை சராசரியை விட 3.3° செல்சியஸ் வரை உயரக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் வெப்பநிலை தற்போதைக்கு நடுநிலையாக இருந்தாலும், கடந்த இரு வாரங்களாக உயர்வடைந்து வருகிறது.

ஜூன் 14 அன்றைய தரவுகளின்படி, இந்தியப் பெருங்கடல் இருமுனையகச் சுட்டெண் எதிர்மறை 0.13° செல்சியஸ் ஆகப் பதிவாகியுள்ளது. (அ)

## புதிய இறக்குமதி ஒழுங்கு வெளியானது வர்த்தமானி

கொழும்பு, ஜூன். 20

இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள் தொடர்பான வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவுகளை மிகவும் திறம்படக் கண்காணிப்பதற்காக, அரசாங்கம் புதிய ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இறக்குமதி பரிவர்த்தனைகளுக்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் வங்கிகள் மூலம் சிறப்புப் பரிவர்த்தனை எண் ஒன்று வழங்கப்படவேண்டும்.

அத்துடன், அந்தப் பரிவர்த்தனைகள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் இலங்கைச் சுங்கத் திணைக்களத்துக்கு அறிவிப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதியாளரின் வரி அடையாள எண் முகவரி, பயனாளர் பற்றிய விபரங்கள், வங்கி மற்றும் கிளைக் குறியீடுகள், கொடுப்பனவுத் தொகை, நாணய வகை, கொடுப்பனவு மற்றும் விநியோக நிபந்தனைகள், கொடுப்பனவுத் திகதி, தற்காலிக விலைப்பட்டியல் எண் மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விபரங்கள் உள்ளிட்ட தகவல்களை வங்கிகள் மூலம் சுங்கத் திணைக்களத்திற்கு வழங்க வேண்டும்.

மேலும், பொருள்களை இறக்குமதி செய்வதற்கான முற்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர், இறக்குமதியாளர்கள் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் தகுதிவாய்ந்த இறக்குமதியாளராகப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பதிவு இல்லாத இறக்குமதியாளர்களுக்கு, வர்த்தக வங்கிகள் மூலம் முற்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் புதிய ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய உத்தரவுகள் நேற்று முதல் நடைமுறைக்கு வந்தன. (அ)

# நாட்டில் அதிதீவிரமடைகிறது டெங்கு அவசர நிலையை பிரகடனப்படுத்துக!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 20

நாட்டில் டெங்கு பரவல் தீவிரமடைந்து வருவதால் சுகாதாரத் துறை பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த மே மாதத்தில் 8,600 டெங்கு நோயாளர்கள் பதிவான நிலையில், ஜூன் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களிலேயே அந்த எண்ணிக்கை 9 ஆயித்தைக் கடந்துள்ளது. குறிப்பாக கொழும்பு, கம்பகா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள வலயங்களாக மாறியுள்ளன. இந்த ஆண்டில் இதுவரை 43 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 27 மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

இது ஒரு தேசிய சுகாதார அவசர நிலை என்பதால், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு தேசிய செயல்பாட்டுக் குழுவை அமைத்து, இலக்கு சார்ந்த திட்டங்களை அரசாங்கம் உடனே நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆங்காங்கே தனித்தனியாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடுத்து, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு தேசிய அளவிலான செயற்பாட்டுக் குழு அல்லது ஜனாதிபதி பணிக்குழு உருவாக்கப்பட வேண்டும்.

மாகாண சபைகள், முப்படைகள், காவல்துறை, சிவில் அமைப்புகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள், பாடசாலைகள் மற்றும் ஊடகங்கள் அனைத்தும் இணைந்து ஒரு இலக்கு சார்ந்த தேசிய திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

மேலும், ஜூன் 20 ஆம் திகதி "வீட்டு வளாகங்களைச் சுத்தப்படுத்தும் தினமாக" அறிவிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் கொசுக்கள் பெருகும் இடங்களைக் கண்டறிந்து அழிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)

# வலி.வடக்கில் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன். 20

வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது சொந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவ அதிகாரிகளின் பங்களா முன்பாக நேற்று வெள்ளிக்கிழமையும் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தினர்.

இதன்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட காணி உரிமையாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (அ)



# எஞ்சியுள்ள ஆறு மாத காலத்துக்குள் சகல திட்டங்களையும் முடிவுறுத்துக!

### வடக்கு ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 20

நாம் தற்போது ஆண்டின் அரைப் பகுதிக்கு வந்துள்ளோம். எனவே, எஞ்சியுள்ள மாதங்களுக்குள் திட்டங்கள் அனைத்தும் துரிதமாக நிறைவுறுத்தப்படவேண்டும். இதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து முழுமையான ஒத்துழைப்பை வழங்கிப் பணிகளை முன்கொண்டு செல்லவேண்டும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில், வடக்கு மாகாண ஆளுநரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான நா.வேதநாயகனின் பங்குபற்றுதலுடன் நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாண மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ம.பிரதீபனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, வடக்கு மாகாண ஆளுநர் தனது இணைத் தலைமையுரையை ஆற்றினார். இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், "அனைவரும் தமது பெறுமதியான நேரத்தைச் செலவிட்டே இவ்வாறான கூட்டங்களில் பங்கேற்கின்றனர். எனவே, இந்தக் கூட்டத்தை மிகவும் வினைத்திறனாகவும் ஆரோக்கியமான முறையிலும் முன் கொண்டு செல்ல அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்," எனக் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தலைமையுரையாற்றிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், "இங்கு வருகை தந்துள்ள அனைவரும் கற்றவர்கள். எனவே, அனைவரையும் பரஸ்பரம் கௌரவமாக நடத்த வேண்டும்," என வலியுறுத்தினார். அத்துடன், வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் வீதி அபிவிருத்தித் திணைக்களமானது தனது வேலைத்திட்டங்களை மிகவும் வேகமாக முன்னெடுத்து வருவதாகவும், மேலதிக வேலைகளைக் கூட அவர்கள் தாமாகவே கோரிப் பெற்றுச் செய்வதாகவும் அவர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இம்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றங்கள் தனித்தனியாக ஆராயப்பட்டன. குறிப்பாக, மாவட்டச் செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள், மத்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் மாகாண சபையால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் என அனைத்தும் தனித்தனியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

கூட்டத்தின் மீள்குடியேற்றம் தொடர்பில் நீண்ட நேரம் விரிவாக ஆராயப்பட்டது.

கட்டடங்களுக்கான குடிபுகு சான்றிதழானது தனியாருக்கு மாத்திரமன்றி, அரச கட்டடங்கள் மற்றும் திணைக்களங்களுக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும் என ஆளுநரால் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஊடாக மாவட்டக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபையின் அவைத் தலைவர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சண்முகநாதன் சிறீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாநகர பிரதி முதல்வர், நகர மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வட மாகாண கடற்படைத் கட்டளைத் தளபதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர், முப்படைகளின் உயர் அதிகாரிகள், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org